# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2008 | ற, ஆகிர்பிறை 2 | பங்குனி 10(23-3-77) புதன் | புத்தகம் 31 | இதழ் 96


# இந்திராசர்வாதிகாரத்துக்கு கிடைத்த மரண அடி!

## இந்திய தேர்தல் முடிவு ஜனநாயகத்தின் வெற்றி!

இந்தியப்பொதுத்தேர்தலில், தொடர்ந்து 10 ஆண்டுகள் பதவியிலிருந்த திருமதி இந்திரா காந்திக்கும் அவரது கட்சிக்கும் கிடைத்ததோல்வி—சர்வாதிகாரத்துக்கும், அதிகார துஷ்பிரயோகத்துக்கும், விழுந்த மரண அடியென்று ஈழத்து அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். இந்திய மக்கள் ஆரோக்கியமான ஜனநாயகத்தின் மீதுதாம் கொண்டுள்ள ஆழமான நம்பிக்கையை இத்தேர்தல் மூலம் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் மேலும் கருத்துக்கூறுகின்றனர்.

தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகத்துக்கு ஏற்பட்டுள்ள தோல்வியை—அக்கட்சி தனது இன்றைய நிலையை மறுபரிசீலனை செய்துகொள்ள மக்கள் தந்த ஒரு சந்தர்ப்பமாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் இதே வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திரா காந்திக்கும், அவரது கட்சிக்கும் பொதுத் தேர்தலில் கிடைத்த பலத்த அடி — சர்வாதிகாரத்துக்கு எதிரான தீர்ப்பு என்றே வர்ணிக்கப்படுகிறது. இந்தியாவின் பாராளுமன்ற ஜனநாயக வரலாற்றில் ஒரு பிரதமர் தோல்வியை தழுவிக்கொண்டது இதுதான் முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

தனது சுயநலத்துக்காக—அதாவது பிரதமர் பதவியில் தொடர்ந்து ஒட்டியிருப்பதற்காக, தனக்கு சார்பாக அரசியற் சட்டத்தையே வளைத்ததும், அதே காரணத்துக்காகவே அவசரகாலச்சட்டத்தை பிறப்பித்ததும், பத்தாயிரத்துக்கு மேற்பட்ட எதிர்க்கட்சித்தலைவர்களையும் தொண்டர்களையும் மிசா சட்டத்தின் கீழ் விசாரணையின்றி சிறைக்குள் தள்ளி கொடுமைப்படுத்தியதும் குடும்பக்கட்டுப்பாட்டுத்திட்டத்தின் பெயரால் நடந்த கொடுமைகளும், தேர்தலின்போது இந்திரா காந்திக்கு எதிராகப் பயங்கரமாக விசுவரூபமெடுத்தன.

அத்துடன், காங்கிரசின் மூத்ததலைவர்களை தூக்கியெறிந்து தனது மகன் சஞ்சாய் காந்தியை அரசியலில் தனது வாரிசு ஆகப் புகுத்த இந்திரா காந்தி எடுத்த முயற்சிகளும் இந்திய மக்களுக்கு அவர் மீது வெறுப்பை ஏற்படுத்தின.

இந்திராகாந்தியும், அவரது மகன் சஞ்சாய் காந்தியும் தோல்வியடைந்திருப்பது — ஆரோக்கியமான நேர்மையான ஊழலற்ற அரசியலுக்குக் கிடைத்த ஒரு பெரிய வெற்றியென்று வர்ணிக்கப்படுகிறது.

ஜனதா கட்சியில் அங்கம் வகிக்கும் இந்தியாவின் பெருந்தலைவர்கள், ஜெயப்பிரகாஷ்நாராயணன். ஜெகஜீவன்ராம்போன்றோர் இந்திய மக்களிடம் ஒரேயொரு பிரச்சினையைத்தான் முன்வைத்தார்கள் — அதாவது;

ஜனநாயகம் வேண்டுமானல்—அவசரகாலச் சட்டம் நீக்கப்படவேண்டுமானல்—எம்மை ஆதரியுங்கள்; சர்வாதிகாரம் நீடித்து நிலைக்கவேண்டுமானல், இந்திராவை ஆதரியுங்கள் என்பதுதான்!

இந்திய மக்கள் சர்வாதிகாரத்துக்கு எதிராக இத்தேர்தலில் தீர்ப்பு அளித்திருக்கிருர்கள்! ஜனநாயகத்துக்காக வாக்குகளை அளித்திருக்கிருர்கள்.

இந்திராகாந்தியின் தோல்விச்செய்தி கிடைத்ததும்இந்தியாவின் பதில் ஜனதிபதி அவசரகாலச் சட்டத்தை உடனடியாக ரத்துசெய்தது குறிப்பிடத்தக்கது.

## வங்கியில் வாய்ப்பூட்டு

முன்னுள் பொருளாதார ஆய்வுப்பகுதி ஆணையாளரும் இந்நாள் ஊழியர் சேமலாபநிதி சுப்ரீன்டென்டனுமான டாக்டர் எச். என். எஸ். கருணுதிலகா அவர்களுக்கு அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நாணய 'மீளமதிப்பு' பற்றி பேசக்கூடாது என்று கடைசி நேரத்தில் வாய்ப்பூட்டுப் போடப்பட்டது. இவர், சென்றவாரம் இலங்கை மத்தியவங்கி ஊழியர்களிடையே மேற்படி விடயம் சம்பந்தமாக உரையாற்றவிருந்தார். தொலைபேசியில் பிரதமரிடமிருந்து கிடைத்த கட்டளையொன்றை அடுத்து, அதுபற்றிப் பேசக்கூடாது என்று வங்கி ஆளுனர் டாக்டர் கருணுதிலகாவுக்கு வாய்ப்பூட்டுப் போட்டாராம். டாக்டர் கருணுதிலகா பேசியிருந்தால், நாணய மீள மதிப்பு பற்றிய அரசாங்கத்தின் ஏமாற்றுவித்தை அம்பலமாகியிருக்கும்!

## பத்து ஏக்கர் தமிழர் நிலம் பௌத்த விகாரைக்கு சுவீகரிப்பு!

திருகோணமலையிலுள்ள பெரியகுளம் குடியேற்றத் திட்டத்தின் கீழ் நெற செய்கை பண்ணப்படும் பத்து ஏக்கர் வயல் நிலம் 'வில்கம் விகாரை' என்று கூறப்படும் பௌத்த விகாரையொன்றுக்காக சுவீகரிக்கப்படவிருக்கிறது. இதற்கான கட்டளையை திருகோணமலையில் புதிதாக சிருட்டிக்கப்பட்டிருக்கும் சேருவாவில தொகுதியின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் உணவு, கூட்டுறவு, சிறுகைத்தொழில் அமைச்சருமான திரு. சூரியாராய்ச்சி திருகோணமலை அரசாங்க அதிபருக்கு பிறப்பித்துள்ளார். கிழக்கிலங்கையின் பிரதான பௌத்தகுருவான வண. மாதுவ இரத்தினவம்ச திஸ்ஸதேரோ என்பவரின் வேண்டுகோளுக்கமைய வே அமைச்சர் இந்தக் கட்டளையைப் பிறப்பித்துள்ளார்.

ஏற்கெனவே திருகோணமலைத் தொகுதியிலுள்ள திரியாய் என்னுமிடத்தில் 1000 ஏக்கர் காணியை சுவீகரித்து, அங்கு பௌத்த யாத்திரிகர் விடுதி கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுவருவது யாவரும் அறிந்ததே!

## தேர்தல் முடிவுகள்!

இச்செய்தி அச்சுக்குப் போகும்போது கிடைத்த 499 இந்தியத்தேர்தல் முடிவுகளில் கட்சிகளின் நிலைமை வருமாறு:—

| | |
|---|---|
| ஜனதாகட்சி | 254 |
| இந்திரா காங்கிரஸ் | 146 |
| ஜெகஜீவன்ராம் கட்சி | 20 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 7 |
| மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் | 18 |
| அ. இ. அ. திமுக | 19 |
| தி. மு .க. | 1 |
| ஏனையவை | 34 |


## சுடர்

ஈழத்தின் மிகச் சிறந்த கலை இலக்கிய ஏடு

பங்குனி இதழில்....

- கலைஞர் கருணுநிதி, இரசிகமணி கனக செந்திநாதன்
- பேராசிரியர் 'கல்கி'
- கோவை மகேசன் ஆகியோரின் கட்டுரைகள்
- தினமணி கதிர் ஆசிரியர் சாவியுடன் ஒரு செவ்வி!
- பி. பி. சி. தமிழோசை 'சங்கர்' தரும் கருத்து
- நான்கு சிறுகதைகள் மற்றும் பல அம்சங்களுடன்

இப்போது

எங்கும் விற்பனையாகிறது

விலை ரூபா ஒன்று மட்டுமே



SUTANTIRAN

இந்திரா காந்திக்கு ஆபத்து

இந்தியா முழுவதிலும் இந்திரா எதிர்ப்பு அலை!

அரசியல் அவதானிகள் கருத்து!

இந்தியப்பொதுத்தேர்தலில் இந்திரா காந்திக்கு ஆபத்து என்றும், இந்தியா முழுவதும் இந்திரா எதிர்ப்பு அலையே இருந்துவருவதாகவும், ஜனதா கட்சிக்கே வெற்றிவாய்ப்பு இருப்பதாகவும், சுதந்திரன் முன்கூட்டியே வாசகர்களுக்கு 27-2-77, 13-3-77 ஆகிய திகதிகளில் எடுத்துக் கூறியிருந்தது. சுதந்திரனின் கணிப்பு இப்போது சரியாகிவிட்டதல்லவா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியாளர் சதிக்கு அடிபணியோம்

## மட்டக்களப்பு கருத்தரங்கில் கவிஞர் காசி ஆனந்தன் முழக்கம்

ஊர்ப்பிரிவினை சாதிப் பிரிவினை மதப்பிரிவினை ஆகிய மூவகைப் பிரிவினைகளையும் தமிழர் மத்தியில் உண்டாக்க ஆட்சியாளர் திட்டமிட்டு சதிகளை உருவாக்கி வருகிறார்கள். ஆட்சியாளரின் சதிகளுக்கு நாங்கள் ஒருபோதும் அடிபணியமாட்டோம்! என்று கவிஞர் காசிஆனந்தன் மட்டுநகர் பன்னிரெண்டாம் வட்டார கருத்தரங்கில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:—

"இலங்கையில் உள்ள அனைவரும் இலங்கையரே அவர்களை சிங்களவர் தமிழர் என்று இரண்டாகப் பிரிய ஒருபோதும் விடமாட்டோம் என்று சிங்கள ஏகாதிபத்தியம் கூறிவருகிறது, அதே நேரத்தில் மட்டக்களப்பான் யாழ்ப்பாணத்தான் என்று பேசும் ராஜன் செல்வநாயகத்தை தலையில் வைத்து கூத்தாடுகிறது சிங்கள ஏகாதிபத்தியம். இதன் அர்த்தம் என்ன? இலங்கையில் உள்ள அனைவரும் இலங்கையர் என்றால் அவர்கள் கருத்துப்படி யாழ்ப்பாணத்தானும் மட்டக்களப்பானும் இலங்கையர்தானே. ஏன் யாழ்ப்பாணத்தானையும் மட்டக்களப்பானையும் மோதவிடும்ராஜனை சிங்கள ஏகாதிபத்தியம் தன் கையாளாக வைத்துக்கொண்டிருக்கிறது. இதுவரை சிறிமாவோ அம்மையார் ராஜனை அழைத்து" யாழ்ப்பாணத்தானும் மட்டக்களப்பானும் இலங்கையர்தான். அவர்களுக்குள்பிரிவினை உண்டாக்காதே என்று ஏன் கூறவில்லை. இதுதான் சிங்கள ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சி. தமிழனிடையே ஊர்ப்பிரிவினையை உண்டாக்கும் சதிதான் இது.

சாதி ஒழிப்பை புதிய குடியரசு அரசியல் சட்டத்திலேயே சேர்க்கவேண்டும் என்று அரசியல் நிர்ணய சபையை தமிழர் கூட்டணி கேட்டிருந்தது. ஆனால் இந்த கருத்தைஏற்க அரசியல் நிர்ணய சபை மறுத்துவிட்டது. சாதிப்பிரிவினை தமிழரிடையில் இருந்தால்தான் தங்களுக்கு ஆதாயம் என்று கருதியதாலேயே சிங்கள ஏகாதிபத்தியம் இப்படிச் செய்தது.

பதியுதீன் என்ற இஸ்லாமியரை கல்வி அமைச்சராக்கி அவரைக் கொண்டுதான் தமிழினத்தை அழிக்கும் தரப்படுத்தலை சிங்கள ஏகாதிபத்தியம் கொண்டு வந்தது. இஸ்லாமிய தமிழருக்கும் இஸ்லாமியர் அல்லாத தமிழருக்கும் இடையே மோதலை உண்டாக்கவே பதியுதீனை திட்டமிட்டு சிங்கள ஏகாதிபத்தியம் பயன்படுத்தியது.

சிங்கள ஏகாதிபத்தியம் ஊர்ப்பிரிவினை ஆகியவற்றை நம்மிடையே உண்டாக்க எடுக்கும் சதிகள் அனைத்தையும் நாங்கள் முறியடிப்போம். தமிழ்ஈழத்தில் இருந்த கட்சிகளெல்லாம் மறைந்து தமிழினத்தின் ஒற்றுமைச் சின்னமாக தோன்றிய தமிழர் கூட்டணியை மேலும் பலமுள்ள இயக்கமாக கட்டி வளர்ப்போம், இவ்வாறு தனது கருத்துரையில் கவிஞர் காசி ஆனந்தன் குறிப்பிட்டார்.

திரு. ஏரோணிபோஸ் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு. ராஜா தலைமை தாங்கினார். இக் கருத்தரங்கில் திரு. வ. பாலசிங்கம் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் வேணுதாஸ் தமிழ் இளைஞர் பேரவைச் செயலாளர் பரமதேவா சிறைமீண்ட இளைஞர் நடேசானந்தம், தமிழர் கூட்டணிப் பிரமுகர் வைத்தியர் நடராசா தமிழேந்தல் ஈழ வேந்தன் ஆகியோர் உரையாற்றினர். தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை கிளைகள் நிறுவப்பட்டன.

# காசி ஆனந்தன் 'இளைஞர்சக்கரவர்த்தி' ஆனார்!

மட்டக்களப்பு மாநகர சபை 12ம் வட்டார மக்கள் 13-3-77ல் உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன் அவர்களுக்கு ஒரு மாபெரும் வரவேற்பை அளித்தார்கள். ஐயாயிரத்துக்கு அதிகமான மக்கள் வெள்ளம் திரண்டிருந்த இவ்வரவேற்பு விழாவில் கவிஞர் காசிஆனந்தன் அவர்களுக்கு 'இளைஞர் சக்கரவர்த்தி' என்ற பட்டம் சூட்டப்பட்டது. கவிஞருக்கு பட்டம் வழங்கப்பட்டபோது மக்கள் கர ஒலி செய்து ஆரவாரித்தார்கள்.

# ஊர் ஒன்றுபட்டால் நாடு ஒன்றுபடும்

## விடுதலைக்காகப் போராடுவது இயற்கை நியதி

### கருத்தரங்கில் காவலூர்பா. உ.

"சென்ற தேர்தலின்போது பிளவுபட்டு, இரு கட்சிகளை ஆதரித்த புளியங்கூடல் மக்கள் இன்று ஒன்றுபட்டு எங்கள் தமிழர் விடுதலைக்கூட்டணியை ஆதரிக்க முன்வந்தமை எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஊட்டுகின்றது" என்று காவலூர் பா. உ. திரு. கா. பொ. இரத்தினம் புளியங்கூடல் மாரியம்மன் கோவில் வீதியில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும்போது குறிப்பிட்டார். அவர்மேலும் தொடர்ந்து பேசியதாவது.

இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்கள் யாவரையும் ஒன்றுபடுத்தி ஒரு கட்சியின் தலைமையில் ஒரு கொள்கையுடன் ஒரு கொடியின் கீழ் தமிழ்ஈழத்தைப் பெறுதற்கு ஒப்பற்ற புனித போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் நாம் ஒவ்வோர் ஊரிலுமுள்ள மக்களை ஒன்றுபடுத்த வேண்டும். ஊர் ஒன்றுபட்டால் நாடு ஒன்றுபடும். பெருந்தியாகங்களைச்செய்து தொடர்ந்து போராடிப் பெறவேண்டிய தனி ஆட்சியைப்பெறுதற்காகப்போராடும் நாங்கள் எல்லா வேறுபாடுகளையும் மறந்து எங்கள் விடுதலைக்காகப் போராட வேண்டும்.

இன்று இலங்கைத் தமிழர் மட்டும் தமிழ் ஈழத்தைப்பெறப்போராடவில்லை உலகத்தில் பல பகுதிகளில் பெரும்பான்மையினத்தால் அடக்கி ஒடுக்கி நசுக்கப்படும் சிறுபான்மை இனங்கள் தனி ஆட்சிக்காகப் போராடுகின்றன. பிலிப்பைன் தீவின் தென்பகுதியிலுள்ள பன்னிரெண்டு லட்சத்துக்கு மேற்பட்ட முஸ்லிம் மக்கள் ஆயுதமெடுத்துப் போராடி வெற்றி பெறும் நிலையை அடைந்துள்ளனர். கனடாவிலுள்ள குயிபெக் மாகாணத்திலுள்ளபிரெஞ்சு மக்கள் தனிநாட்டுக்காகப் போராடுகின்றனர். சைப்பிறசிலுள்ள சிறுபான்மையினத்தவர்களான துருக்கியர் தனிநாட்டை பெற்றுவிட்டனர். இவர்களின் தொகை ஒருலட்சத்துப் பதினாயிரம். ஸ்பெயின் தேசத்திலுள்ள பாஸ்க் சாதியினரும் தன்னாட்சிக்குப் போராடிவருகின்றனர்.

அடிமைப்படுத்தப் பட்ட சிறுபான்மை இனம் தனி ஆட்சிக்காக போராடாமல் ஆளுவோரின் அடிவருடிகளாகி அறிவிழந்து பிழைப்பதே இயற்கைக்கு மாறானது. மனிதப்பண்புக்கு வேறானது. எனவே எங்கள் தனிநாட்டுப்போராட்டம் அரசியல் வரலாறு, மனித பண்பு, விடுதலைவேட்கை முதலியவற்றுக்கு இசைந்த இயற்கையான செயல்; வெற்றியீட்டும்போராட்டம். எல்லோரும் சேர்ந்து போராடினால் விரைவில் வெற்றியீட்டலாம். எனவே சேரவாரும் செந்தமிழ் மக்களே என்று எல்லோரையும் அழைக்கின்றோம்."

திரு. பொன்னுச்சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் திரு. சு. க. மகேந்திரன் திரு. பொன்மதிமுகராசா திரு. கி. திருவருள் முதலானோரும் உரையாற்றினர்.

# வேலணைமேற்கில் கருத்தரங்கு

"தனிநாட்டுக்காக-இழந்த எங்கள் ஆட்சியை மீளப் பெறுவதற்காகப்போராடும் நாங்கள் தேர்தலோடு மட்டும் நிற்போமானால் சிங்க வேட்டைக்குச் சென்றவன் சிற்றெலிவேட்டையில் ஈடுபடுவதைப்போலிருக்கும். தேர்தல் கிட்டியவுடன் தேர்தலுக்கு, தேர்தல் பிழைப்புக்களை நடத்துபவர்கள் மக்களிடம் ஓடிவருவார்கள். வெற்றி கிடைக்குமா எனக் கேட்டுச் சாதகங்களுடன் சோதிடர்களிடமும் ஓடுவார்கள். எங்கள் இயக்கம்தான் தொடர்ந்து விடுதலைக்காகப் போராடிவரும் ஒரே ஒரு இயக்கம்; இதனை ஊக்குவது உங்கள் கடமை"

இவ்வாறு வேலணை மேற்குமுடிப்பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய பண்டிதர் கா. போ. இரத்தினம் பா. உ. குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் வேலணைக் கிராமசபைத் தலைவர் திரு. க. சதாசிவம், திரு. சி. இராசரத்தினம், திரு. கந்தையா திரு. அண்ணுதாசன் திரு. துரைராசா திரு. கி. திருவருள் முதலானோரும் உரையாற்றினர். திரு. ஆ. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் காவலூர் பா. உ. எழுதிய தடுப்புக்காவலில் பத்து நாட்கள் எனும் நூலின் முதற் பிரதியை திரு. நா. வீரசிங்கம் வாங்கினார்.

# பொறியியலாளரை தாக்கினாராம் பி ஆர் செல்வநாயகம்

## வேலைநிறுத்தம் செய்ய முடிவு!

இலங்கையின் அரசாங்க சேவையிலுள்ள பொது சிவில் பொறியியலாளர் சங்கம், ஆள்புலன் இலாகா பொறியியலாளர் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த எல்லா பொறியியலாளர்களும் ஒரு அடையாள வேலைநிறுத்தத்தை மேற்கொள்ள தீர்மானித்துள்ளார்கள்.

இத்தோடு மட்டுநகர் 2வது தேசிய பேரவை உறுப்பினரும், மாவட்ட அரசியல் அதிகாரியுமான திரு. பி. இராஜன் செல்வநாயகம் நடாத்தும் அல்லது அவர் அழைக்கும் எக் கூட்டங்களும் சமூகம் கொடுப்பதில்லை என்ற முடிவும் எடுக்கப் பட்டது.

திரு. இராஜன் செல்வநாயகம் சென்ற சில நாட்களுக்கு முன்பு இப்பகுதியை சேர்ந்த ஆள்புலன் இலாகாவை சேர்ந்த ஒரு பொறியியலாளரை அவமரியாதை செய்தும் அவரை பயமுறுத்தியும்; இயந்திர உபகரண இலாகாவை சேர்ந்த இன்னுமொரு பொறியியலாளரைபகிரங்கமாகத்தாக்கியதாகச் சொல்லப் படுவதையும் முன்னிட்டே இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இத் தீர்மானம் இலங்கைகிளை கூடாக பிரதம மந்திரிக்கும்நீர்ப்பாசன நெடுஞ்சாலைகள் அமைச்சருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

# ஆரையம்பதியில் காசிக்கு வரவேற்பு

கடந்த 5-3-77ம் திகதி சனிக்கிழமை பி. ப. 3மணியளவில் ஆரையம்பதி செல்வா நகரில், செல்வா நகர் இளைஞர்களால் கவிஞர் காசி ஆனந்தனுக்கு திடீர் வரவேற்புஅளிக்கப்பட்டது. கவிஞர் காசி ஆனந்தன், சிவஜெயம் முதலானோர் புடைசூழ, பரமதேவா இல்லத்தில் தேநீர் விருந்தளிக்கப்பட்ட பின்னர் செல்வாநகர் சிவன் ஆலய வீதிக்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். செல்வாநகர் சிவா கிராம முன்னேற்ற சங்க தலைவர் திரு. பூபாலபிள்ளையின் தலைமையில் செல்வன் சதானந்தனின் தேவாரத்துடன் கருத்தரங்கு ஆரம்பமானது. அங்கு கருத்தரங்கு ஒலிபெருக்கி இன்றியே நடைபெற்றது.

திருவாளர்கள் சிவஜெயம் பரமதேவா பொன்வேணுதாஸ் ஆகியோர் தமிழ்ஈழம் பற்றி உணர்ச்சி மிகுசொற்பொழிவு ஆற்றினார்கள். கடைசியாக காசி ஆனந்தன் பேச ஆரம்பித்தபோது இளைஞர்கள் தமது மார்புகளையும் கைகளையும் சவர அலகுகளால் கிழித்து இரத்ததிலகம் இட்டார்கள். முன்னேற்பாடு இன்றி திடீரென கருத்தரங்கு நடைபெற்ற போதிலும் கவிஞர் பேச ஆரம்பித்தபோது மாலைகள் அவரது கழுத்தை. நிறைத்தன மக்களும் நிரம்பிவழிந்தனர். அவர் பேசும்போது — "தேர்தலைப் பற்றியே எனக்கு அக்கறையில்லை. தமிழ் ஈழம் அமைக்கவேண்டும் என்பதற்காகத்தான் தீவிரமாக இயங்கிக்கொண்டிருக்கின்றேன். எனது இயக்கத்தின் தலைமைப்பீடம் எதை சொல்கிறதோ, அதை செய்யத்தயாராக இருக்கின்றேன்" என்று குறிப்பிட்டார். திரு. முருகமூர்த்தியின் நன்றியுரையுடன் கருத்தரங்கு முடிவுற்றது.

கருத்தரங்கு, முடிந்து கவிஞர் காரை நோக்கிசென்றபோது 'தந்தை வாழ்க' காசி வாழ்க 'தமிழ் ஈழம் அமைப்போம்' என்ற கோசங்களின் மத்தியில் காசியை வழியனுப்பி வைத்தார்கள்.

# தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக்கிளை நடத்தும் சமூகநல சேவை வாரம்!

தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக் கிளையினர் சமூக நலசேவைத் திட்டம் ஒன்றை தயாரித்துள்ளனர். இத்திட்டத்தை கோப்பாய் கிராமத்தில் முதன் முதலாக அமுல் நடத்தவுள்ளனர். தமிழ் சமுதாயத்திலுள்ள பின்தங்கிய மக்களுக்கு உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

கிராம சுத்திகரிப்பு, தையற்பயிற்சி, பிளாஸ்டிக் பைகள், லேஸ்கள் பின்னற் பயிற்சி, கோழிவளர்ப்பு, நூல் நிலையம்தொடங்கல், ஆகிய 5 அம்சத்திட்டத்துடன் தமது பணியை இவர்கள் ஆரம்பிக்கின்றனர்.

5-4-77 முதல், 11-4-77 வரைகோப்பாய் கிராமத்தில் இத்திட்டத்தை செயற்படுத்தவுள்ளனர். இதிலே பங்குபற்ற விரும்பும்தொண்டர்கள், தமிழ் மகளிர் பேரவை சமூகநலத் திட்டம் மே/பா சுதந்திரன், 194 ஏ, பண்டாரநாயகா வீதி, கொழும்பு-12 எனும் முகவரிக்கு எழுதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுரமணி - பொதுக்கூட்டம் பூசைமணி - கருத்தரங்கு!

## இருதயபுரத்தில் காசி ஆனந்தன்

'கோயிலில் — நெடிய மணிக்கோபுரத்தின் உச்சியில் பெரிய ஆலயமணி முழங்கும். அது, தேவாலயம் இருக்கிறது, இறைவனைத் தரிசிக்க வாரீர்' என ஊர் மக்களை அழைக்கும் மணியாகும். ஆலயத்தைப்பற்றி ஊராருக்குப் பிரச்சாரம் செய்யும் மணி, இந்தப் பெரிய மணி. ஆனால் உள்ளே மூலஸ்தானத்தில் இறைவனுக்கு பூசை நிகழும்போது ஐயர் கையில் சிறிய பூசை மணியை ஆட்டிக்கொண்டிருப்பார் இந்த மணிதான் கோயிலின் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றும் மணி. தேவனுக்காய் முழங்கும் பூசை மணி ஒலிபெருக்கி பூட்டி நாம் நடத்தும் பெரிய பொதுக்கூட்டங்கள் ஆலயத்தின் பெரிய கோபுர மணி போன்றவை. இயக்கத்தைப் பற்றி பிரச்சாரம் செய்ய பொதுக்கூட்டங்கள் பயன்படுகின்றன. ஆனால் மூலஸ்தானத்தில் முழங்கும் சிறிய பூசைமணியைப்போல் நமது இயக்கத்துக்கு உள்ளே வலுவூட்டுவது கருத்தரங்குகளேயாகும்.

மட்டுநகர் இருதய புரத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணிக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கவிஞர் காசி ஆனந்தன் குறிப்பிட்டார். கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசியதாவது:—

'காரில் வந்து மேடையில் காலைவைத்து மேடையில் இருந்து காரில் காலைவைத்து தலைவர்கள் ஓடி விடுகிறார்கள். பொதுக்கூட்டம் முடிந்துவிடுகிறது என்று பொதுவான ஒரு குறை உண்டு. இதில் ஓரளவு உண்மையும் இருக்கிறது. மகாத்மாகாந்தி அடிகள் கிராமம் கிராமமாக உலா வந்து மக்களோடு மக்களாக வாழ்ந்தார். பெரிய பொதுக் கூட்டங்களால் அல்ல சிறிய கருத்தரங்குகளாலேயே அவர் தனது இயக்கத்தை நடத்தினார். மேடையின் நடுவில் அல்ல மக்களின் நடுவில் அவர் நின்றார். நமது இயக்கத்தின் வளர்ச்சிக்கும் மேடைக் கூட்டங்களைவிட கருத்தரங்குகளே அதிக நன்மை பயக்கும் என்று நான் நினைக்கிறேன்.

11-3-77 இருதயபுரம் மேற்கில் நடைபெற்ற இக் கருத்தரங்கின் முடிவில் தமிழர் கூட்டணி, தமிழ் மகளிர் பேரவைக் கிளைகள் நிறுவப்பட்டன. தமிழ் இளைஞர் பேரவை பிரமுகர்களான ஜெயம், பரமதேவா, வேணுதாஸ் மற்றும் இருதய புரத்தைச் சேர்ந்த கமலநாதன் வேலும்மயிலும் ஆகியோர் இக்கருத்தரங்கில் உரை நிகழ்த்தினர்.

## மட்டக்களப்புதொகுதி தமிழ் இளைஞர்பேரவை அமைப்புக்குழுதெரிவு

கடந்த 12-3-77ல் மட்டக்களப்பு தாமரைக்கேணியில் நடைபெற்ற மட்டக்களப்பு தொகுதி த. இ. பேரவையின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் அமைப்புக்குழு நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர். திரு. கா. சிவஜெயம் கூட்டத்துக்கு தலைமைவகித்தார். தலைவர்— வேணுதாஸ், துணைத்தலைவர்—சிறீதரன், செயலாளர்—பரமதேவா, துணைச் செயலாளர்— சூ. சகாயம், பொருளாளர்—கா. சிவஜெயம், அலுவலகச்செயலாளர் மோகனச்சந்திரன், செயற்குழுஉறுப்பினர்கள்—பேரின்பம், தங்கவேலாயுதம், கிருஷ்ணபிள்ளை, ராஜ்மோகன், ஜெயந்தராசா. சிற்றூர்கள் தோறும் கிளைகள் அமைப்பது, கருத்தரங்குகள் நடத்துவது என்று தீர்மானிக்கப் பட்டது.

## புகைவண்டியிலும் கருத்தரங்கு

புகைவண்டியிலும் சுமார் 150 மாணவ மாணவியர் மத்தியில் கருத்தரங்கு நடத்தி புதிய சாதனையை நிலைநாட்டினார் கவிஞர் காசி ஆனந்தன். இப்புகைவண்டிக் கருத்தரங்கு 17-3-77 இரவு மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி வந்த புகைவண்டியில் இடம் பெற்றது. கவிஞர் பயணம்செய்த அதே வண்டியில் மட்டக்களப்பு—அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 150 தமிழ் மாணவ மாணவிகள் விளையாட்டுப் போட்டியொன்றில் கலந்துகொள்வதற்காக கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். கவிஞரைக் கண்டதும், அவரைச் சுற்றி இந்த மாணவ மாணவிகள் மொய்த்துக் கொண்டார்கள். கவிஞர் தனது சிறைச்சாலை அனுபவங்களையும், தமிழ்ஈழப் போராட்டத்தையும் எடுத்து விளக்கி உரையாற்றினார். கவிஞர் உரையாற்றி முடிந்தபோது சிறைச்சாலைகளை நிரப்ப நாங்களும் தயார் என் தமிழ் மாணவிகள் புகைவண்டி அதிர கோஷமெழுப்பினர். இப்புகைவண்டிக் கருத்தரங்கில், சிவஜெயம், பொ. வே. திசைவீரசிங்கம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

## உடுப்பிட்டித் தொகுதி தமிழ்இளைஞர்பேரவை கருத்தரங்குகள்

25-3-77 வெள்ளிக்கிழமை காலை 8-00மணியளவில் துன்னாலை தெற்கு துனுவில் பிள்ளையார்கோயில்முன்றலிலும் காலை 10மணியளவில் கரணவாய்தெற்குஅண்ணுசிலையடியிலும் நண்பகல் 1 மணியளவில் தம்பசிட்டி, கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய அருகாமையிலும் மந்திகை துறையாமூலை இலங்கேஸ்வரன் சனசமூக முன்றலிலும், மாலை 4-30 மணியளவில் துன்னாலை வடக்கு ஸ்ரீசுப்பிரமணியசுவாமி கோவில் முன்றலிலும், இரவு 7 மணியளவில் கரவெட்டி மேற்கு தாளங்குளி முருகையன் கோயில் முன்றலிலும் எழுச்சிக்கூட்டங்கள் நடைபெறும்.

இக்கருத்தரங்குகளில் சிறைமீண்ட இளைஞர்களான மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன், பொ. சத்தியசீலன், திரு. க. ஜெயக்கொடி ஆகியோர் உரையாற்றுவார்கள்.

# யுத்தகளத்தில் போராடியேனும் நாம் தமிழ் ஈழத்தைப் பெற்றேயாகவேண்டும்!

## கல்லாற்றுக் கருத்தரங்கில் மாவைசேனாதிராசா

"சிங்கள ஆட்சியாளர்கள் அகிம்சை வழியில்—சமாதானமான முறையில் தமிழ் ஈழத்தை எமக்குத் தராவிட்டால்; யுத்தகளத்தில் போராடியேனும் நாம் தமிழ் ஈழத்தைப்பெற்றேயாகவேண்டும்"

4-3-77வெள்ளிக் கிழமை மாலை பெரிய கல்லாற்றில் இடம்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணிக் கருத்தரங்கில் உரையாற்றிய மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பட்டிருப்புத்தொகுதி த. வி. கூட்டணி அமைப்புச் செயலாளர் திரு. கணேசபிள்ளை அவர்களின் தலைமையில் இடம்பெற்ற கருத்தரங்கில் மாவை சேனாதிராசா மேலும் பேசுகையில்

1973ம் ஆண்டில் எங்களைக் கைது செய்து நூற்றுக்கணக்கான பொலிசார் புடைசூழ எம்மை அழைத்துச்சென்றனர். ஆனால் 75ம் ஆண்டில் எம்மை கைது செய்தபோது ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்கள் அணிவகுத்து நிற்க, விமானப்படையினரின் விசேட விமானங்களில் எங்களை அழைத்துச்சென்றார்கள். இரண்டு ஆண்டுகளுக்கிடையில் தமிழ் மக்களின் உணர்ச்சி எந்த அளவுக்கு வளர்ந்திருக்கின்றது என்பதை இச்சம்பவங்களின் மூலம் புரிந்துகொள்ளலாம்.

துப்பாக்கி ஏந்திப் புரட்சி செய்த 18 ஆயிரம் சேகுவேராக் கைதிகளை விடுதலை செய்துவிட்டு எங்களில் ஒரு சிலரை மட்டும் சிறைச்சாலைகளில் அடைத்து வைத்திருந்தார்கள் ஆட்சியாளர்கள். அதற்கு அவர்கள் கூறிய காரணம், தங்களின் பாதுகாப்புக் கருதி — நாட்டின் பாதுகாப்பைக் கருதியே அவ்விதம் வைத்திருந்தார்களாம்.

எங்களில்—தமிழ் இளைஞர்களில் பத்தோபன்னிரெண்டு பேரைக்கண்டு பயப்படுகின்ற சிங்கள ஆட்சியினர், தமிழினம் திரண்டெழுந்தால் தாக்குப் பிடிப்பார்களா என்பதை சிந்தித்துப் பாருங்கள். தமிழ் ஈழத்தில் மட்டுமல்ல. இலங்கைக்கு வெளியேயும் எத்தனையோ கோடி தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் நினைவில் வைத்து கொள்ளவேண்டும்.

தமிழ்ஈழத்தை நிறுவும் பொறுப்பு தமிழ் இளைஞர் பேரவையைச் சார்ந்திருக்கின்றது. தமிழர் கூட்டணியினர் திட்டங்களைத் தீட்டித்தர, தமிழ் இளைஞர் பேரவை அவற்றைச்செயலாக்கத் தயாராக இருக்க வேண்டும். தமிழ் இளைஞர் பேரவையின் எழுச்சி மகாநாடு மே 14, 15ம் திகதிகளில் மட்டக்களப்பில் இடம் பெறும்போது எமது கொள்கைகள் செயற்திட்டங்களை வெளியிடுவோம்" என்று குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் பட்டிருப்புத்தொகுதி த. வி. கூ. பிரமுகர் திரு. பூ. கணேசலிங்கம், உடுவில் பா.உ. திரு. வி. தர்மலிங்கம், சட்டத்தரணி கனக. மனோகரன், தமிழேந்தல் ஈழவேந்தன் பட்டிருப்புத்தொகுதி த. இ. பே. அமைப்பாளர் இரா. மதுரநாயகம் மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவையைச்சேர்ந்த திரு. வ. ஆ. தங்கவேலாயுதம் ஆகியோரும் பேசினர்.

சிறைமீண்ட இளைஞர் கல்லாறச் சிங்கம் நடேசானந்தனும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் இளைஞர் பேரவையின் எழுச்சிக் கூட்டங்கள்!

தமிழ் இளைஞர் பேரவையின் எழுச்சிக்கூட்டங்கள் 19-3-77 முதல், 1-4-77வரை வடமாகாணத்தில் தொகுதிகள் தோறும் நடைபெறுகின்றன. இக்கூட்டங்களில் கவிஞர் காசிஆனந்தன். வண்ணை ஆனந்தன், மாவை சேனாதிராசா, சத்தியசீலன் ஆகியோர் உரையாற்றிவருகின்றனர் கூட்டம் நடைபெறும் இடங்கள் வருமாறு:-

23-3-77 — வேலணை.

24-3-77 — தெல்லிப்பளை, காங்கேசன்துறை.

25-3-77 — கரவெட்டி, பருத்தித்துறை.

26-3-77 — வண்ணார் பண்ணை, காரைநகர்,

27-3-77— யாழ் கோட்டை மைதானம்.

28-3-77 — மானிப்பாய், ஆனைக்கோட்டை.

29-3-77 — யாழ் கந்தர் மடம்.

30-3-77 — முல்லைத்தீவு.

31-3-77 — முல்லைத்தீவு.

1-4-77 — வவுனியா.

## தமிழ்இளைஞர்பேரவை கோவிற்குளம் கிளை

மேற்படி கிளை கூட்டம் 14-3-77 திகதி மன்னார் கோவிற்குளம் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் சிறைமீண்ட தமிழ் இளைஞர் பேரவை தலைவர் ஒருவரான வண்ணை ஆனந்தன், அடம்பன் கிராம சபைத்தலைவர்: திரு. பி. எம். சேபமாலை, கோவிற்குளம் த. வி. கூ. செயலாளர் பொன். இராமநாதன் ஆகியோர் தலைமையில் நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டார்கள். தலைவர்: ராஜன் மயில்வாகனம். உபதலைவர்: பொன். இராமநாதன். செயலாளர்: இ. அன்னலிங்கம். உபசெயலாளர்: வே. வேலாயுதம். பொருளாளர்: ஜ. வீரசிங்கம். உறுப்பினர்கள்: செ. பத்மநாதன், இ. சண்முகலிங்கம், க. வன்னியசிங்கம், இ. இராமச்சந்திரன், பொ. அமிர்தலிங்கம்.

## தமிழர் விடுதலைக் கூட்டணி நல்லூர் தொகுதி கோண்டாவில் கிழக்கு கிளை

தலைவர்: செ. சபாரெத்தினம், உபதலைவர்கள்: பொ. பஞ்சலிங்கம், ச. சற்குணலிங்கம், செயலாளர்: இ. குணநாயகம், உபசெயலாளர்கள்: கு. திலகப்பிரகாஸ், சோ. சண்முகலிங்கம், பொருளாளர்: செ. பஞ்சலிங்கம், உப பொருளாளர்கள்: ந. இரத்தினசிங்கம், ம. சச்சிதானந்தம்,

மற்றும் 20 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: வே. சி. பத்மநாதன், வ. த. நடராசா, ப. சிவசுப்பிரமணியம்.

## தமிழ் மகளிர்பேரவை மட்டக்களப்பு இருதயபுரம் கிளை அலுவலர்கள்

தலைவி: சாமித்தம்பி சத்தியவதி. உபதலைவி: செல்வி; ச. கமலாசினி. செயலாளர்: செல்வி. தா. குணசுந்தரி. உபசெயலாளர்: செல்வி. வீ, மங்களேஸ்வரி. பொருளாளர்: செல்வி. ம. பரிமளாதேவி.


செயற்குழு: செல்வி த. காஞ்சனாதேவி செல்வி. சாந்த பவானி திருமதி: தங்கராஜா, திருமதி: பிரான்சிஸ், செல்வி. பி. பத்மினி செல்வி. வீ. மேகலா, திருமதி. அன்னசுந்தரம், திருமதி. வேலுமயில், திருமதி. மனோன்மனி, செல்வி. செ. மல்லிகா, திருமதி. பாலையா, ராசையா சோதிமலர்

## இன்றைய கருத்தரங்கு!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளையினர் நடாத்தும் வாராந்தக் கருத்தரங்கு இன்று (புதன் கிழமை) மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி லோறிஸ் வீதி 51ம் இலக்க இல்லத்தில் திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெறுகிறது. 'இன்றைய இந்திய அரசியல் போக்கு' எனும் தலைப்பில் 'றிபியூன்' ஆசிரியர் திரு. எஸ். பி. அமரசிங்கம் பேசுவார். சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவைமகேசன் அவர்களும் பேசுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN



தமிழ் மகளிர் பேரவை — மட்டக்களப்பு இருதயபுரம் கிளை அமைப்பின்போது அதன் தலைவி செல்வி சாமித்தம்பி சத்தியவதி பேசுகிருர். அருகில் கவிஞர் காசிஆனந்தனும் காணப்படுகிருர்.

# கல்வியமைச்சின் அக்கறையீனம் கலவரத்துக்கு வித்தாகிறது

## வத்தளையில் சிங்கள இனவெறி உச்சக் கட்டம்!

வத்தளைப்பகுதியில் கடந்த சிலநாட்களாக தமிழர்களுக்கு எதிராக தீவிர சிங்கள இன வெறி தூண்டிவிடப்பட்டுள்ளது. தமிழர்களுக்கு எதிரான 'பச்சை' இனவாதத்தைக் கக்கும் சுலோகங்கள் தமிழர்களின் வீட்டுச் சுவர்களில் எழுதப்பட்டுக் காணப்படுகின்றன. தெருவில் தமிழர்கள் அச்சமுடன் நடமாடவேண்டிய பதட்ட சூழ்நிலை தோன்றியுள்ளது.

வத்தளைப் பகுதியில் வாழ்வோர் பெரும்பாலும் கிறிஸ்தவர்களே. கிறித்தவ சமயத்தைசேர்ந்ததமிழர்களும் சிங்களவர்களும் இப்பகுதியில் வாழ்ந்த போதிலும்—ஒரே மதத்தைச்சேர்ந்த தமது தமிழ் சகோதரர்களுக்கு எதிராக சிங்கள வெறியர்கள் துவேஷத்தைக் கொட்டி வருகின்றனர்.

வத்தளைப்பகுதியில் தமிழ்—சிங்களப் பிணக்குத் தோன்றுவதற்கு காரணம் கல்வியமைச்சின் பொறுப்பில்லாத போக்குத்தான் என்று தெரியவருகிறது. வத்தளையிலுள்ள பரி, ஆன் மகளிர் வித்தியாலயத்தில் தமிழ்ப்பிரிவும், சிங்களப் பிரிவும் உண்டு. சிங்களப் பிரிவில் கடமைபார்த்து வந்த இரண்டு சிங்கள ஆசிரியர்கள் அங்கிருந்து வேறு இடங்களுக்கு கல்வியமைச்சினுல் இடமாற்றத்துக்குட் படுத்தப்பட்டனர். இடமாற்றம் செய்யப்பட்ட இடங்களுக்கு புதிய ஆசிரிகள் நியமனம் செய்யப்படவில்லை. இதனுல் அங்கு படித்த சிங்கள மாணவிகளின் கல்வி பாதிக்கப்பட்டது.

இந்த விஷயத்தை சுட்டிக் காட்டி மேற்படி வித்தியாலயத்துக்கு புதிய ஆசிரியர்களை நியமிக்கும் படி வித்தியாலய அதிபரான மதர் ஏஞ்சல் அவர்கள் கல்வியமைச்சுக்கு எடுத்துக்கூறியும் எதுவித நடவடிக்கை எடுக்கப்படவில்லையாம். இதன் காரணமாக அங்கிருந்த 18 சிங்கள மாணவிகளை வத்தளை சென். அந்தனீஸ் கல்லூரிக்கு அவர்களது படிப்பு பாழாகக் கூடாதென்ற ஒரே காரணத்துக்காக மதர் ஏஞ்சல் அனுப்பிவைத்தாராம்.

மதர் ஏஞ்சல் ஒரு தமிழ் பெண்ணுக இல்லாத போதிலும்—அவரைத் தமிழினத்தவர் என்று எண்ணிக் கொண்டு, தமிழர் திட்டமிட்டு சிங்களப் பிள்ளைகளின் கல்வியை நாசப்படுத்தி வருவதாக சிங்கள இனவெறியர்கள் பிரசாரம் நடத்தி வருகின்றனர். அத்துடன் மதர் ஏஞ்சல் அவர்களையும் தூஷிக்கத் தொடங்கினர். தமிழர்களின் வீட்டுச்சுவர்களில் தமிழர்களுக்கெதிரான இன வெறிச் சுலோகங்கள் எழுதப்படுகின்றன.

தமிழர்கள் சிலர் ஆங்காங்கே சிறிய தாக்குதல்களுக்கும் உள்ளாக்கப்பட்டார்களாம்!

பொலிசார் இதுபற்றி போதிய அக்கறை காட்டவில்லையென்றும், பொலிசாருக்கு முன்னுலேயே சுலோகங்கள் எழுதப்பட்டதாகவும் தெரியவருகிறது.

பொலிசார் அச்சுலோகங்களை அழிக்கவும் இல்லை. அச்சுலோகங்களுக்கு காவல் புரிந்துவருகின்றனர். அதே சமயம் அச்சுலோகங்களைப் படம்பிடித்த பத்திரிகை படப்பிடிப்பாளர் ஒருவரிடமிருந்து 'நெகட்டிவ்'வை பறிமுதல் செய்தார்களாம்.

யூ. என். பி. ஆதரவாளர்களான சிங்களக் குண்டர்களே இதில் முன்னுக்கு நிற்கிருர்களாம்.

கல்வியமைச்சின் பொறுப்பற்ற செயலினுல் — வத்தளையில் ஓர் இனக்கலவரத்துக்கு வித்தூண்டப்படுகிறது. கடைசி நேரத்திலாவது கல்வியமைச்சர் கண்விழிப்பாரா?

# கட்டித்தங்கம் காசிஆனந்தன்

'பரிசுத்தமான தியாகியான காசிஆனந்தன் மீது மாசு கற்பிக்கச் சிலர் முயற்சி செய்கிருர்கள். காக்காய்ப் பொன்னுக்கும், தங்கத்துக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் இப்படிக் குறை கூறுவது வெட்கத்தையும் வேதனையையும் தருகிறது. காசிஆனந்தன் மட்டக்களப்பில் பேசிய தன் கருத்து — வேகம் குறைந்த தலைவர்களால் எவ்விதபயனுமில்லை; அவர்கள் ஒதுங்கியிருக்க வேண்டும் என்பதேயாகும். இதைப் புரிந்துகொள்ளாதவர்கள் தப்பர்த்தம் கொள்கிருர்கள்.

"இயங்க முடியாதவர்களை விட்டு விலகுங்கள் இயங்குவதற்கு என்று இயங்கும் இளைஞர்கள் கேட்பதில் தவறில்லை; இதைத்தான் காசிஆனந்தன் கல்லடியில் சொன்னுர்—இரட்டை மாட்டுவண்டியில் பூட்டப்பட்டுள்ள ஒருமாடு நடக்கமுடியாது படுத்துவிட்டால் அந்த வண்டிக்கு வேறு ஒரு மாட்டைப் பூட்டி வண்டியை இழுத்துச் செல்லவேண்டியது வண்டிக்காரனின் கடமை. இயங்காதவர்களை இழுத்துக்கொண்டு பயணம் செய்வது முடியாத பயணமாகிவிடும்!

"தலைவர்கள் செல்லவேண்டியவேகத்தில் செல்லாவிட்டால், அவர்களை உந்தித்தள்ள வேண்டியது இளைஞர்கள் கடமை. அதற்கும் தலைவர்கள் செல்லாவிட்டால் அவர்களை ஒதுக்கிவிட்டு இளைஞர்கள் தொடர்ந்து முன்னேற வேண்டும்!"

—யாழ் புகையிரத நிலையத்தில் 19-3-77 பிற்பகல் கவிஞர் காசிஆனந்தனுக்கு பல்லாயிரம் பொதுமக்கள் அளித்த உணர்ச்சிமிகு வரவேற்பின்போது நாவலர் அமிர்தலிங்கம் பேசியது.

# மாணவர் போராட்டம் அதிபர்பாடு திண்டாட்டம்!

மகாஜனக் கல்லூரி க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவ மன்றத்தின் பிரிவுகளில் ஒன்ருன வணிக மன்றத்தின் கூட்டம் ஒன்றில் சிறப்புபேச்சாளராக கலந்துகொள்வதற்கு சிறைமீண்ட வண்ணை ஆனந்தனை அழைப்பதென்று மன்ற மாணவர்கள் முடிவுசெய்தனர். ஆனுல் வண்ணை ஆனந்தனை அழைப்பதற்கு மேற்படி கல்லூரி அதிபர் அனுமதிக்க மறுத்துவிட்டதையடுத்து மேற்படி மன்றத்திலிருந்து அதன் தலைவர் கெங்காதரன், செயலாளர் கணேஸ்வரன், பொருளாளர் செல்வராசா ஆகியோர் விலகினர்; இவ்வாறு மன்றப்பதவிகளிலிருந்து விலகியதைக் காரணம் காட்டி, பாடசாலையை விட்டு இம்மூவரும் விலக வேண்டும் என்று பாடசாலை அதிபர் எச்சரித்தபோது, கல்லூரியின் ஏனைய மாணவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து குறித்த மூன்று மாணவர் மீதும் ஏதாவது நடவடிக்கையெடுத்தால், தாம் மாற்று நடவடிக்கையெடுக்கப் போவதாக அதிபரை எச்சரித்துள்ளனர். இதனுல் அதிபர் திண்டாடுகிருராம்!

# தமிழ் மகளிர் பிரார்த்தனை!

தமிழ் மகளிர்பேரவையின் கொழும்புக்கிளையினர் நடாத்தும் வாராந்தப் பிரார்த்தனை எதிர்வரும் வெள்ளிக்கிழமை (25-3-77) மாலை 5-30 மணிக்கு கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பல வாணேசர் கோவிலில் இடம்பெறும்.

# உதயசூரியன் கொடியின்கீழ் ஒன்றுபட சங்கரி அழைப்பு!



'தமிழ் பேசும் இனம் இன்றுபடும் இன்னல்போல் என்றும் பட்டதில்லை. கடந்த ஏழுவருட காலம் தமிழர் ஒவ்வொரு துறையிலும் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டனர். ஆனுல் இன்று அரசின் கால்வருடிகள் கங்காணிமாராக தரகர்களாக தமிழ்ப் பகுதிக்கு அடிக்கடிவந்து எமது இனத்தைக் கூறு போட்டு விற்பதற்காக கூட்டுறவு சபைமூலம் திட்டமிட்டு சதிவேலை செய்கின்றனர். இவர்களை விரட்டி தமிழினத்தின் ஒருமைப்பாட்டை காத்து ஒரு சுதந்திரமான தனி அரசை நிறுவ இன்று தமிழர் கூட்டணி திடசங்கற்பம்பூண்டுவிட்டது. இவ்வியக்கத்தை ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக ஆதரவு அளித்து தமிழனின் தன்மானத்தைக் காப்பாற்ற வேண்டும்."

இவ்வாறு கிளிநொச்சிப் பா.உ. திரு. வீ. ஆனந்தசங்கரி புளியம்பொக்கனை நாகேசுவரர் சிவன் கோவில் முன்றலில் நடைபெற்ற தமிழர் கூட்டணி ஆரம்பக் கூட்டத்தில் சூளுரைத்தார்.

இக்கூட்டம் தமிழ்க் காங்கிரஸ் ஆரம்பகால உறுப்பினரும் கூட்டணிப் பிரமுகருமான திரு. இ. த. சுப்பிரமணியம் தலைமையில் நடந்தது.

திரு. இ. த. சுப்பிரமணியம் தனது தலைமையுரையில் கூறியதாவது:—

"நிரபராதிகளான எமது தமிழ் இளைஞர்கள் வருடக் கணக்கில் சிறையில் தள்ளப் பட்டு இம்சிக்கப்பட்டனர். [illegible]

நாமும் அடக்கப்பட்டு ஒருவித சிறை வாழ்க்கையே வாழ்ந்தோம். இதையெல்லாம்உணர்ந்ததாய்க்குலத்தவர்கள் குமுறிக்கொண்டிருக்கின்றனர். இத்தருணத்தில் எமக்கு சுயமரியாதையுடன் இயங்கும் தமிழர் கூட்டணி ஒரு ஔஷதமாக சிறந்த மருந்தாக உள்ளது. அமரர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம், திரு. மு. திருச்செல்வம் ஆகியோரும் தந்தை செல்வாவும் தீர்க்க தரிசனத்துடன் காட்டிய பாதையைத்தான் கூட்டணி பின்பற்றுகின்றது. ஆகவே நாம் இக்கொடிக் கீழ் ஒன்றுபடவேண்டும்.

திரு. கு. நாகேந்திரம், திரு. மு. நல்லையா, திரு. வ. சின்னத்தம்பி. ஆகிய பலர் உரையாற்றிய பின்பு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட தமிழர் கூட்டணிக் கிளை நிறுவப்பட்டது:-

காப்பாளர்: திரு. வீ. ஆனந்தசங்கரி பா.உ. தலைவர்: திரு. இ. த. சுப்பிரமணியம். உபதலைவர்: திரு. வ. சின்னத்தம்பி (குருக்கள்) இணைச்செயலாளர்கள்: திரு. மு. நல்லையா, திரு.கு. நாகேந்திரம். பொருளாளர்: திரு. கா. தம்பு. 11பேர் கொண்ட நிர்வாகக்குழுவும் நிறுவப்பட்டது.

நீம் வாசனை சோப்

சுத்தமான வேப்பெண்ணெய் கலந்து தயாரிக்கப்பட்ட நீம் வாசனை சோப் உங்கள் சருமப் பாதுகாப்பிற்கு மிகவும் சிறந்தது. இன்றே வாங்கி பாவியுங்கள்.

ஒரு மில்க்வைற் தயாரிப்பு

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயக்க வீதி, [illegible], இலக்கத்தில் 1977ம் வருடம் மார்ச் மாதம் 23-ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org